**மிஹிந்தலை பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மிஹிந்தலை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று / தேறிய சொத்துக்கள் /மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிஹிந்தலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்ான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம், நிறுவனமொன்று தயாரித்த பாதீடுகளின் பாதிடப்பட்ட தகவல்கள் அந்த காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் பாதிடப்பட்ட தகவல்களின்றி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பாதிடப்பட்ட தகவல்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்றிற்க இணங்காத வகையில் தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றேன். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த வருடத்திற்குரிய கணக்காய்வுக் கட்டணப் பட்டியல் ரூபா 131,100 ஆன போதிலும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 300,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் பொறுப்புகள் ரூபா 168,900 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன் | சரியான கணக்காய்வுக் கட்டணம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் கணக்காய்வு கட்டண செலவினத்தினுள் 2017 மற்றும் 2020 (ரூபா 300,000) ஆண்டுகளுக்குரிய செலுத்த வேண்டிடிய ரூபா 426,794 உள்ளடங்கியிருந்தமையால் மீளாய்வாண்டின் மிகையானது அந்த பெறுமதியால் குறைவடைந்திருந்தது. | | ஆண்டுக்குரிய கணக்காய்வுக் கட்டணம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவாக காசாக மேற்கொள்ளப்படாத ரூபா 22,525,439 தொகையும் உள்ளடங்கியிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன் | காசாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் காசுப்பாய்ச்சலினுள் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டுக்குரிய செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 263,433 தொகை 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த செலவினம் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | | செலவினங்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக காணப்பட்ட பெறுமதி ரூபா 2,684,770 ஆன கடன் கொடுத்தோர் மற்றும் கடன் பட்டோர் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் குறிப்பு இலக்கம் 13 மற்றும் 17 இன் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | மீளாய்வாண்டுக்குரிய கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | பிரதேச சபையின் பெக்கோ லோடர் இயந்திரம் மற்றும் கலி பவுசர் வாடகைக்கு வழங்கியமையயால் பெற வேண்டிய ரூபா 39,200 தொகையான பெற வேண்டிய வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | | மீளாய்வாண்டுக்குரிய பெற வேண்டிய வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (எ) | மீளாய்வாண்டின் போது வீதிகள் மற்றும் பாலங்கள் மற்றும் மதகுகள் ஆகியவற்றின் சேர்ப்பனவாக இரு வீதிகளுக்கு சரளைக் கற்களை இடுவததற்கான செலவினம் ரூபா 873,037 தொகை நிலையான சொத்தாக காண்பிக்கப்பட்ட காரணத்தால், மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்கள் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரளைக் கல் வீதிகளை நிர்மாணித்தல் நிலையான சொத்தொன்றாக கணக்கு வைக்கப்படக்கூடாது. |

## 1.7 இணக்கமின்மைகள்

---------------------------

### 1.7.1 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

-------------------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தரப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சபைக்கு சொந்தமான 08 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

-------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,740,711 ஆக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,249,599 ஆக இருந்தது.

### 2.2 நிதி நிர்வாகம்

-------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச வங்கியின் நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 1,000,000 இனை விஞ்சிய தொகையொன்று தொடர்ச்சியாக ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அவசர தேவைகளுக்காக பயன்படுத்த வேண்டியமையால் நடைமுறைக் கணக்கில் பேணிச் செல்லப்படுகின்றது. | மிகையான பணம் முதலீடு செய்யப்பட்டு வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

| | | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வீத வரி மற்றும் வரி | | | |
| | (i) | 1987 இன் 15ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 134(1) இன் பிரகாரம், அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) | 2019 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 101,844 தொகையான குப்பை வரியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை குப்பை வரியை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வாடகை | | | |
| | (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 3,640,712 ஆன நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |
| | (ii) | பிரதேச சபையினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட வியாபார உரித்து குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள A,B,C,D ஆக குறிப்பிடப்பட்டுள்ள வியாபார கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள 68 கடைகளுக்காக வாடகையை மீள மதிப்பீடு செய்யாது 2009 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட | பல்வேறு அரசியல் காரணங்களின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டவாறு உள்ளது. | புதிய மதிப்பீடொன்றின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டவாறு காணப்பட்டது. | | |
| (iii) | 2019 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் ரூபா 379,260 தொகையான நிலுவை கேள்வி வாடகை (இறைச்சிக் கடை) அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது தவறியிருந்தது. | பிரதேச செயலாளரின் மற்றும் பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் இறைச்சிக் கடை மூடப்பட்டதால் நிலுவை வாடகை செலுத்துதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 577,482 தொகையான நிலுவை விளம்பரப் பதாகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் வியாபாரக் கட்டிடத் தொகுதியின் தரைத் தளத்தில் அமைந்துள்ள கடைகளுக்காக 2020 ஆம் ஆண்டிற்காக பெற வேண்டிய ரூபா 151,500 ஆன வாடகையை அறவிடாது பதிவழிப்பததற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும், அதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 182 ஆம் பிரிவின் பிரகாரம் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விடயங்களை ஆராய்ந்து மீண்டும் நிவாரணம் பெற்றுக்கொள்ள சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, உரிய விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் அல்லது ஆளுநருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பிரதேச சபை அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். |